weekly School – Department of Education – Sabaragamuwa weekly School – Department of Education - Sabaragamuwa weekly School

மாகாணக் கல்வித் திணைக்களம் - சபரகமுவ - வாராந்த பாடசாலை

Drama (T)

September 1st Week

Prepared by T. Kajooriya Bfa, Pgde.

R/Nivi/ Dela Tamil Maha Vidyalaya

தரம் - 9

**மூன்றாம் தவணை -13 ஆம்வாரம்.**

**தேர்ச்சி** - 4.0 இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு - வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** - 4.3. கூத்துக்களின் ஊடாக வெளிப்படும் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களை அறிவார்.

**செயற்பாடு** - 4.3 " கூத்தின் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களை அறிந்து கொள்வோம். "

**தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. கூத்தாற்றுகை செய்பவர் | கட்டியக்காரன் |
| 2. கூத்தின் அரங்க மொழி | சபையார்கள் |
| 3. கூத்தை பழக்குபவர் | ஆடலும் பாடலும் |
| 4. கூத்தாற்றுகைக்குரிய கலைஞர்கள் | கூத்தர். |
| 5. கூத்தின் ஆரம்பத்தில் தோன்றும் பாத்திரம் | அண்ணாவியார். |

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் இடுக.**

1. கூத்தாடுவது சமூக மட்டத்தில் வாழ்க்கையோடு ஒன்றித்த ஒரு நிகழ்வு ஆகும். ( )
2. சமூக ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கு கூத்து உதவுகிறது. ( )
3. பாரம்பரியக் கூத்து முன்னிரவில் ஆரம்பமாகி விடிய விடிய ஆற்றுகை செய்யப்பட்டது. ( )
4. பாரம்பரியக் கூத்து படச்சட்ட மேடையில் ஆடப்பட்டது. ( )
5. கூத்து ஆற்றுகையில் சமூகத்தவர் பல உதவிகளை, செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். ( )

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. கூத்து ஆடப்பட்ட நோக்கங்களைத் தருக.
2. கூத்தில் பங்களிப்புச் செய்யும் கலைஞர்களைக் கூறுக.
3. பாரம்பரிய சமூகத்தில் கூத்து வீட்டுக்கு வீடு சென்று ஆடப்படுவதற்கான காரணத்தை தருக.
4. கூத்து ஆற்றுகையில் சமூகத்தவரின் பங்களிப்பைக் கூறுக.
5. சமூகத்தில் கூத்துக்கள் பேணப்பட்டு நின்று நிலைபெற்று பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கூறுக.